தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 70 | 4 Pages | 9.10.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மலர்: 02 | இதழ்: 70 | 4 பக்கங்கள் | 9.10.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்**
**கன்றிய காத லவர்**

**விளக்கம்:**

களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் மிக்க விருப்பம் உடையவர், அளவு (சிக்கனம்) போற்றி வாழும் நெறியில் நின்று ஒழுக மாட்டார்.

# 70வது தேசிய திரைப்பட விழா பொன்னியின் செல்வன் திரைப்படத்திற்கு விருது வழங்கினார் ஜனாதிபதி




புது டெல்லி, அக். 9

ஆண்டுதோறும் இந்திய திரைப்படங்களையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கும் விதமாக இந்திய திரை படைப்புகளுக்கு இந்திய அரசால் தேசிய விருது வழங்கப்படுகிறது. இதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசால் நியமிக்கப்படும் தேசிய தேர்வுக்குழு இதனை தேர்ந்தெடுக்கிறது. 70வது தேசிய திரைப்பட விருது கடந்த ஆகஸ்ட் 16ம் தேதி அறிவிக்கப்பட்டது.

2022ம் ஆண்டின் சிறந்த படத்துக்கான விருது அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று டெல்லியில் 70வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு தேசிய விருது வென்ற திரைப்பட கலைஞர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இதில் தமிழில் மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் மட்டும் சிறந்த படம், சிறந்த ஒளிப்பதிவு (ரவிவர்மன்), சிறந்த பின்னணி இசை (ஏ.ஆர்.ரகுமான்), சிறந்த ஒலிப்பதிவு (ஆனந்த்கிருஷ்ணமூர்த்தி) ஆகியபிரிவுகளில்4விருதுகளைவென்றுள்ளது.

சிறந்த படத்திற்கான விருதை பொன்னியின் செல்வன் பாகம் 1 வென்றுள்ளது. இதற்கான விருதை குடியரசு தலைவரான திரவுபதி முர்மு வழங்க அதனை படத்தின் தயாரிப்பாளரான சுபாஸ்கரன், இயக்குனர் மணி ரத்னம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர் .

பொன்னியின்செல்வன்1படத்தைசுபாஷ்கரனின்லைகாநிறுவனத்துடன் இணைந்து மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனமும் தயாரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த விழாவில் மணிரத்னம் விருது வாங்கும்போது குஷ்பு எழுந்து நின்று கைதட்டினார். மணிரத்னம் தற்போது வாங்கியுள்ளவிருதையும்சேர்த்துஇதுவரை7தேசியவிருதுவாங்கியுள்ளார். அதே போல் ஏ.ஆர் ரகுமானும் 7 தேசிய விருதை பெற்றுள்ளார்.

# வேன் மீது பஸ் மோதி கோர விபத்து 5 பேர் பலி


லாகூர், அக். 9

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மகாணம் லாகூரில் உள்ள நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை பஸ் சென்றுகொண்டிருந்தது.

பஸ் வேகமாக சென்றுகொண்டிருந்தபோது டிரைவர் உறங்கியுள்ளார். இதனால், சாலையில் முன்னே சென்றுகொண்டிருந்த வேன் மீது அதிவேகமாக மோதியது.

இந்த கோர விபத்தில் வேனில் பயணம் செய்த 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 6 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நேபாளம்: மலையேற்றத்தின்போது மாயமான ரஷிய வீரர்கள் 5 பேர் சடலமாக மீட்பு



காத்மண்டு, அக். 9

இந்தியா, நேபாளம் இடையே இமயமலை உள்ளது. இமயமலையின் சிகரங்களில் ஏற உலகம் முழுவதில் இருந்து மலையேற்ற வீரர், வீராங்கனைகளும், சுற்றுலா பயணிகளும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனிடையே, ரஷியாவை சேர்ந்த 5 மலையேற்ற வீரர்கள் கடந்த 6ம் தேதி நேபாளத்தில் இருந்து இமயமலையின் தளகிரி சிகரத்தை நோக்கி பயணத்தைதொடங்கினர். முகாமில் இருந்து காலை 6 மணிக்கு பயணத்தை தொடங்கிய வீரர்கள் உடனான ரேடியோ தொடர்பு காலை 11 மணியளவில் துண்டிக்கப்பட்டது. இதையடுத்து மாயமான மலையேற்ற வீரர்களை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், மாயமான மலையேற்ற வீரர்கள் 5 பேரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். ஹெலிகாப்டர் மூலம் நடைபெற்ற தேடுதல் பணியின்போது மலையின் 7 கிலோமீட்டர் உயரத்தில் 5 பேரின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளது. மலை சிகரத்தில் இருந்து கீழே விழுந்து 5 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இச்சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# வளர்ச்சிப்பணிகளை கண்காணித்து துரிதப்படுத்த மாவட்ட பொறுப்பாளர்களாக அமைச்சர்கள் நியமனம் முதலமைச்சர் உத்தரவு

சென்னை, அக். 9

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும், பொது மக்களுக்குச் சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகாலப் பணிகளைக் கூடுதலாக மேற்கொள்ளவும் அமைச்சர்கள் சிலரை, சில மாவட்டங்களுக்குப் பொறுப்பு அமைச்சர்களாக நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.



அதன்படி வருவாய் மாவட்ட வாரியாக பின்வரும் அமைச்சர்கள் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேருவையும்; தேனி மாவட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமியையும்;

திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலுவையும்; தருமபுரி மாவட்டத்திற்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வத்தையும்; தென்காசி மாவட்டத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனையும்;

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவையும்;

நீலகிரி மாவட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதனையும்;

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணியையும்;

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியையும்; காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தியையும்; பெரம்பலூர் மாவட்டத்திற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கரையும்;

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியையும்; மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதனையும் நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வினேஷ் போகத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து





சென்னை, அக்.9

அரியானாசட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற வினேஷ் போகத்துக்குதமிழகதுணைமுதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "அரியானாவில் ஜுலானா சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றதற்காக இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையும் காங்கிரஸ் வேட்பாளருமான வினேஷ் போகத்துக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மக்கள் பிரதிநிதியாக மக்கள் சேவையின் இந்த புதிய அத்தியாயத்தில் அவர் மகத்தான வெற்றி பெற வாழ்த்துகள். பாசிச சக்திகளுக்கு எதிராக அவரது ஆன்மாவும் ஆற்றலும் அவரை பின் தொடரட்டும்" என்று அதில் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு



மயிலாடுதுறை, அக். 9

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் வட்டாரத்திற்குட்பட்ட ஆணைக்காரன்சத்திரம், கூத்தியம்பேட்டை, திருமயிலாடி, பழையபாளையம் ஆகிய பகுதிகளில் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் 2030 ஆண்டிற்குள் குடிசை இல்லா தமிழகம் உரு வாக்கப்படும் என்ற தொலைநோக்கு பார்வை யின் அடிப்படையில் முதற்கட்டமாக 2024-25ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், மயிலாடுதுறை மாவட்டத் தில் ஊரக மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 3600 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 5 வட்டாரங்களில் உட்பட்ட கிராமங்களில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவர் 360 சதுர அடி பரப்பளவில் அரசின் ஒப்புதலுடன் கூடிய 4 வகையான வடிவமைப்பில் ஏதாவது ஒரு வடிவத்தில் பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப வீடு கட்டிக்கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் நிதி மூன்று கட்டங்களாக வழங்கப்படுகிறது.

இதனையொட்டி, மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் வட்டாரத்திற்குட்பட்ட ஆணைக்காரன்சத்திரம், திருமயிலாடி ஆகிய கிராமங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கான்கிரீட் வீடு கட்டப்பட்டு வருவதை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளிடம் உரிய தவணைத்தொகை வங்கி கணக்கிற்கு பெறப்பட்டுள்ளதா எனவும், கட்டுமான பணிக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட், மணல் உள்ளிட்ட பொருட்கள் தரமானதாக உள்ளதா எனவும் கேட்டறிந்தார்கள். மேலும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கான்கிரீட் வீடுகளின் கட்டுமான பணிகளை தொடர்புடைய ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, கூத்தியம்பேட்டை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.9 இலட்சத்து 51 ஆயிரம் மதிப்பீட்டில் கொப்பியம் வாய்க்கால் தூர்வாரப்பட்டு வருவதையும், பழையபாளையம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சிகுளம் வெட்டப்பட்டுள்ளதையும் மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார்கள். இவ்வாய்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உதவி திட்ட அலுவலர் (வீடுகள்) ரமேஷ் பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர் தியாகராஜன் உடன் இருந்தனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இராஜேந்திரன் வடகிழக்கு பருவமழையையொட்டி சேலம் மாவட்ட கலெக்டரகத்தில் பேரிடர் மேலாண்மை துறை மற்றும் தீயணைப்புத்துறையின் சார்பில் அவசரகால மீட்புக்கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார். உடன் கலெக்டர் பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, மாநகர காவலாணையர் பிரவீங்குமார் அபின்பு, துணை மேயர் சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




பனை விதைகளை நடுவதற்காக திருமங்கல பஞ்சாயத்தின் ஏரி ஓரங்களில் நடும் நிகழ்வு நடைபெற்றது. சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் இரா. இராமநாதன்ஐயா, மற்றும் பட்டதாரி அறிவியல் ஆசிரியர் .A.லியோனஸ் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் செ.மேக்தலின் ஜாய் கிறிஸ்டி. மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும், இணைந்து பனை விதைகளை நடும் நிகழ்வு நடைபெற்றது. பிறகு சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியின் இரா. ராமநாதன். தலைமையாசிரியர் என். எஸ். எஸ். மாணவர்களுக்கு அறிவுரை கூற நிறைவு விழா இனிதே நிறைவு பெற்றது.

## பாராளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் பங்கேற்ற விஜய் வசந்த்

சென்னை, அக். 9

ரெயில்வே துறையின் நாடாளுமன்றநிலைக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட விஜய் வசந்த் தனது தொகுதியில் கிடப்பில் உள்ள ரெயில்வே திட்டங்களை செயல்படுத்த கோரிக்கைவிடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஃபேஸ்புக் பதிவில், "இரயில்வே துறைக்கான நாடாளுமன்றநிலைக்குழு அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் நேற்று நடைபெற்றது."

"இதில் நானும் ஒரு உறுப்பினராக தமிழகத்திற்கு,

குறிப்பாக குமரி மாவட்டத்தில் வெகு நாட்களாக கிடப்பில் கிடக்கும் இரயில்வே திட்டங்களை செயல்படுத்த முடியும் என நம்புகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் பா.ம.க.வினர் இலங்கை தூதரக முற்றுகை போராட்டம்

சென்னை, அக். 9

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படும்தமிழகமீனவர்களை பாதுகாக்க கோரியும், தற்போது இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை மீட்க கோரியும், மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண கோரியும் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை இன்று முற்றுகையிட போவதாக பா.ம.க. அறிவித்திருந்தது.




அதன்படி வள்ளுவர் கோட்டம் அருகே பா.ம.க.வினர் திரண்டனர்.இந்தபோராட்டத்திற்கு முன்னாள் மத்திய மந்திரி ஏ.கே.மூர்த்தி, பா.ம.க. பொருளாளர்திலகபாமா ஆகியோர் தலைமை தாங்கினர்.

மேலும் சத்திரிய நாடார் இயக்க நிறுவனர் சந்திரன் ஜெயபால், தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் முத்து ரமேஷ் நாடார், நெல்லை தூத்துக்குடி நாடார் மகிமை பரிபாலன சங்க தலைவர் ஆனந்த ராஜ், தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை மாநில ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் உள்பட பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட மீனவர் கிராமங்களான தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் உள்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். போராட்டத்தில் ஏ.கே.மூர்த்தி பேசும்போது, "கைது செய்யப்படும் மீனவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது.

இலங்கை சிறையில் மொட்டை அடித்து அவமானப் படுத்துகிறார்கள். கச்சத்தீவை தாரை வார்த்த தமிழக அரசுக்கு மீனவர்கள்படும்பாடு தெரியவில்லையா? இந்த பிரச்சனைக்கு தமிழக அரசு தீவிர அழுத்தம் கொடுத்து நிரந்தர தீர்வு காண முன்வர வேண்டும். தமிழக மீனவர்களும் இந்திய மீனவர்களே என்பதை கருத்தில் கொண்டு இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.

எல்லையில் இந்திய மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு நாட்டு சிறைகளிலும் வாடும் இலங்கை மற்றும் இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

உடமைகளை திருப்பிக் கொடுக்க வேண்டும். இரு நாட்டு பிரதிநிதிகள் குழு அமைத்து பேச்சுவார்த்தை மூலம் உடனடி தீர்வை எட்ட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.


அதைத்தொடர்ந்து இலங்கை தூதரகத்தை முற்றுகையிட புறப்பட்டார்கள் அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார் 5 பேரை மட்டும் மனு கொடுக்க அழைத்து சென்றனர்.

## சமூகநீதி குறித்து பேச தி.மு.க.வுக்கு தகுதி இல்லை அன்புமணி

சென்னை, அக். 9

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்டம்பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக பணியாற்றி வந்த பட்டியலினத்தைச் சேர்ந்த தி.மு.க. உறுப்பினரான பூங்கோதை அதே ஒன்றியத்தின் துணைத் தலைவராக பணியாற்றி வரும் தி.மு.க. ஒன்றியச்செயலாளர் மாரிவண்ண முத்து என்பவரால் தமக்கு இழைக்கப்படும் சாதி ரீதியான அடக்குமுறைகளையும்,



அவமதிப்புகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் பதவி விலகியிரு க்கிறார். இது அதிர்ச்சியளிக்கிறது.

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் பூங்கோதைக்கு முறையான நாற்காலி, மேசை கூட வழங்கப்படவில்லை என்றும், அதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகவே அவர் பதவி விலகியிருப்பதாகவும் அவரது கணவர் சசிக்குமார் கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் பட்டியலினத்தவருக்கு ஒதுக்கப்பட்ட பெரும்பான்மையான உள்ளாட்சிகளில் பட்டியலினத்தவருக்கு உண்மையான அதிகாரம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர திராவிட மாடல் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உள்ளாட்சிகளில் சமூகநீதியை நிலைநிறுத்த முடியாத தி.மு.க.வுக்கு சமூகநீதி குறித்து பேசுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை. பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை தி.மு.க. அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## தமிழர்களுக்கு 80 சதவீத வேலை சட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, அக். 9

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகில் செயல்படும் சாம்சங் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை, தொழிற்சங்க உரிமை உள்ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்த நிலையில், தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் நேற்று நடைபெற்ற பேச்சுகளில் சாம்சங் நிறுவனத்திற்கும், தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களில் இன்னொரு பிரிவினர் வேலை நிறுத்தத்தை தொடரப்போவதாக அறிவித்துள்ளனர்.



உண்மையில் சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவில்லை. மாறாக தொழிலாளர்களிடையே பிரிவினை ஏற்படுத்தப்பட்டு, சாம்சங் நிறுவனநிர்வாகம் தப்ப வைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் நலன்களை அடகுவைத்து விட்டு சாம்சங் நிறுவனத்தின் நலன்களை பாதுகாத்திருக்கிறது. இதன் மூலம் , தொழிலாளர்களுக்கு பெருந்துரோகம் செய்திருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது.

வேலை நிறுத்தத்தைத் தொடரும் சாம்சங் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்கு அரசு துணை நிற்க வேண்டும். அத்துடன் தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80 சதவீதம் வேலைவாய்ப்புகளை தமிழர்களுக்கு வழங்குவதற்கான சட்டத்தை உடனடியாக கொண்டு வந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## அதிமுக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் பொறுப்புகளில் இருந்து நீக்கம்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 9

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரத்தை அமைப்பு செயலாளர் மற்றும் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ஆகிய

கட்சி பொறுப்புகளில் இருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

கட்சியின் கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளுக்கு எதிராக செயல்பட்டதால் நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர்



மீதான புகார் குறித்து விசாரணை நடத்த வேண்டி உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1000 இடங்களில் 15ந்தேதி மருத்துவ முகாம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை: அக்.9

சென்னை சைதாப்பேட்டை தொழிலாளர் காலனியில் இன்று நடைபெற்ற மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக சுகாதாரத்துறை தயார் நிலையில் உள்ளது. தற்போது காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ள இடங்களில் மருத்துவ முகாம்களைநடத்தி வருகிறோம். வருகிற 15ந்தேதி தமிழகம் முழுவதும் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.



சென்னையில் 100 இடங்களிலும், மற்ற மாவட்டங்களில் 900 இடங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்படுகிறது. முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட மக்களை தேடி மருத்துவ முகாம் திட்டம் 1 கோடி பேரை சென்றடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் 2 கோடி பேர் வரையில் பயனடைந்துள்ளனர். இதுவரை 1 கோடியே 96 லட்சத்து 77,577 பேர்பயன் அடைந்திருக்கிறார்கள். இதன் மூலம் ஐ.நா.சபையின் பாராட்டையும் பெற்றுள்ளோம். டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கு பொது மக்களும் முழுமையாக ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

2012ம் ஆண்டு 66 பேரும், 2013ல் 65 பேரும் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ள நிலையில் கடந்த 3 ஆண்டுகளில் டெங்கு உயிரிழப்புகள் குறைந்து உள்ளன. இந்த ஆண்டு இதுவரையில் 7 பேர் மட்டுமே பலியாகி இருக்கிறார்கள்.

தங்களது வீடுகளின் சுற்றுப்புறங்களில் மழைநீர் தேங்காமல் மக்கள் பார்த்துக்கொண்டாலே கொசு உற்பத்தி தடுக்கப்பட்டு விடும். எனவே பொதுமக்கள் இதில் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தீபாவளிக்கு ஆன்லைனில் பட்டாசு வாங்குகிறீர்களா? உஷாராக இருங்க...

சென்னை, அக். 9

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 3 வாரங்களே இருக்கும் நிலையில், பட்டாசுகளை வாங்குவதற்கு பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

அனைத்து பொருட்களுமே தற்போது ஆன்லைனில் கிடைக்கும் நிலையில் பட்டாசுகளையும் மக்கள் இருந்த இடத்தில் இருந்தே வாங்குவதற்கு முனைப்பு காட்டி வருகிறார்கள்.



அதற்கேற்ப பல்வேறு பட்டாசு விற்பனை நிறுவனங்களும் ஆன்லைனில் ஆர்டர்களை பெற்று விற்பனையில் ஈடுபடத் தொடங்கி உள்ளன.

அதில் குறிப்பிட்ட சதவீதம் தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குறைந்த வகையில் பட்டாசுகளை வாங்குவதற்கு போட்டி போட்டு ஆன்லைனில் பணத்தை செலுத்தி விட்டு பட்டாசு பார்சல்களுக்காக காத்திருக்கிறார்கள்.

இதனை பயன்படுத்தி மோசடி பேர்வழிகள் ஆன்லைனில் ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கத்தில் வலை விரித்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போலியான பெயர்களில் பட்டாசு விற்பனை நிறுவனங்கள் மற்றும் இணையதள முகவரிகளை தொடங்கி ஆன்லைனில் பணத்தை வாங்கிவிட்டு பட்டாசுகளை அனுப்பாமல் இந்த கும்பல் மோசடியில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் ஆன்லைனில் பட்டாசு வாங்குபவர்கள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும் என்று பட்டாசு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆன்லைனில் சில்லரை விலையில் பட்டாசுகளை விற்பனை செய்வதற்கு ஏற்கனவே கோர்ட்டு தடை விதித்துள்ள நிலையில் அதையெல்லாம் மீறியே ஆன்லைனில் பட்டாசு விற்பனை அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் மூலமாக நடைபெற்று வருகிறது.

இதனை பயன்படுத்தித் தான் ஆன்லைனில் மோசடி கும்பல் ஏமாற்றுவதற்கு திட்டம் போட்டு செயல்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் ஆன்லைனில் பட்டாசுகளை ஆர்டர் செய்து வாங்கும் போது மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் பணத்தை இழந்து தவிக்கும் நிலை ஏற்படும் என்றும் பட்டாசு வியாபாரிகள் எச்சரித்துள்ளனர்.

## கையில் ரத்தம் சொட்ட சொட்ட பட்டாக்கத்தி, காயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த வாலிபர்

காரைக்குடி, அக். 9

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகேயுள்ள முத்துப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தவர் பால்ராஜ். இவருக்கு சிவபாண்டியன் மற் றும் பிரகதீஸ்வரன் ஆகிய இரண்டு மகன்கள்உள்ளனர்.இருவருக்கும்திருமணமாகிதனிக்குடித்தனம் வசித்து வருகின்றனர்.

இதற்கிடையே சிவபாண்டியனுக்கும் பிரகதீஸ்வரனுக்கும் இடையே பூர்வீகச் சொத்துக்களை பிரிப்பதில் தகராறு இருந்து வந்தது. இந்தநிலையில் நேற்று இரவு மீண்டும் அவர்களுக்குள் தகராறு உருவானது. இதில் ஆத்திரம் அடைந்த பிரகதீஸ்வரன், அண்ணன் சிவபாண்டியனை தனது இரு நண்பர்களுடன் சேர்ந்து பட்டாக்கத்தியால் தலை, கழுத்து, கை உள்ளிட்ட இடங்களில் சரமாரியாக வெட்டினார். பலத்த காயம் அடைந்த சிவபாண்டியன், அந்த சூழ்நிலையிலும் தம்பியின் கையில் இருந்த பட்டாக்கத்தியை பறித்தார். பின்னர் பிரகதீஸ்வரன் மற்றும் அவரது நண்பர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதையடுத்து பலத்த காயங்களுடன் சிவபாண்டியன் நேராக காரைக்குடியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றார். கையில் ரத்தம் சொட்ட சொட்ட பட்டாக்கத்தி, தலை, கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் வந்தவரை பார்த்த ஆஸ்பத்திரியில் பணியில் இருந்த செவிலியர்கள், காவலாளி ஆகியோர் பதறியடித்துக்கொண்டு ஓடினர்.

பின்னர் இதுபற்றி தனி அறையில் இருந்த டாக்டர்களுக்கும், போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் காரைக்குடி வடக்கு போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அவர் கள் சிவபாண்டியனிடம் விசாரித்தபோது சொத்து பிரச்சினை காரணமாக தனது தம்பி தன்னை வெட் டியதாகவும் அவரிடம் இருந்து பட்டாக்கத்திய பறித்து கொண்டு சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு வந்ததாகவும் தெரிவித்தார்

## விஜய்யின் புதிய கட்சியால் அ.தி.மு.க.வுக்கு பாதிப்பு இல்லை: செல்லூர் ராஜூ தகவல்

மதுரை, அக். 9

மதுரைமாநகர்மாவட்ட அ.தி.மு.க. சார்பில் மதுரைதிண்டுக்கல்ரோடு, நேதாஜி ரோடு பகுதியில் நடைபெற்ற சொத்து வரி உயர்வுக்கு எதிரான மனித சங்கிலி போராட்டத்திற்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்ச ருமான செல்லூர் ராஜூ தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:



தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்து தொடர்ந்து மக்களின் மீது வரிச் சுமைகளை ஏற்றி வருகிறது. தற்போது ஆண்டு தோறும் 6 சதவீத சொத்து வரி உயர்வினை மக்கள் மத்தியில் திணித்துள்ளது. இது மட்டுமல்ல மின்கட்டணம் உள்ளிட்ட அனைத்து விலைவாசிகளும் அதிகரித்துவிட்டன. ஆனால் முதலமைச்சர் இதுபற்றி எதுவும் கவலைப்படாமல் தனது தந்தை பெயரில் பூங்கா திறப்பதை சாதனையாக நினைத்துக் கொண்டிருக்கிறார். மகன் உதயநிதியை துணை முதலமைச்சராக்கி அழகு பார்க்கிறார். ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வர வாக்களித்த மக்கள் மீது வரிக்கு மேல் வரியை போட்டு வருகிறார். வரிக்குதிரையின் உடம்பில் உள்ள வரியை விட தமிழக மக்கள் மீது சுமத்தப்பட்ட வரியே அதிகமாக உள்ளது.

தி.மு.க. ஆட்சியில் எங்கு பார்த்தாலும் போதை பொருள் நடமாட்டம் அதிகரித்துவிட்டன. இதனை தான் கவர்னர் ஆர்.என்.ரவி தெளிவாக கூறியிருக்கிறார். முன்பெல்லாம் பள்ளி, கல்லூரிகளுக்கு முன்பு இனிப்பு மிட்டாய்கள் தான் விற்கப்படும். ஆனால் தற்போது, போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பிள்ளைகளை விடுதியில் தங்க வைத்து படிக்க வைக்க கூட பெற்றோர்கள் அஞ்சுகிற சூழ்நிலையை தி.மு.க. அரசு உருவாக்கி உள்ளது.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மக்களால் மறக்கப்பட்டவர். அவரைப் பற்றி இப்போது பேசுவது பொருத்தம் அல்ல. நடிகர் விஜய் இப்போதுதான் புதிய கட்சியை தொடங்கியுள்ளார். மாநாட்டின் போது தான் அவரது கொள்கை கோட்பாடு பற்றி தெரியும். அப்போது தான் அவரது கட்சியை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். விஜய்யின் புதிய கட்சியால் அ.தி.மு.க.வுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

சென்னை மெரினாவில் நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சியின் போது 5 உயிர்கள் பறிபோய் உள்ளது. இதை மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் தடுத்திருக்க முடியும். ஒவ்வொரு இடங்களிலும் உரிய பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு எத்தனை பேர் அங்கே அனுமதிக்கப்பட வேண்டுமோ அத்தனை பேரை மட்டுமே அனுமதித்திருந்தால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டு இருக்காது. ஆனால் இதுபோன்று கூட்டத்தை கட்டுப்படுத்த தேவையான எந்த நடவடிக்கையும் மாநில அரசு எடுக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவையில் 2வது நாளாக கனமழை: சாலைகளில் மழைநீருடன் பெருக்கெடுத்து ஓடிய கழிவு நீர்



கோவை, அக். 9

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலையில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் மாலை மற்றும் இரவு வேளைகளில் மழை பெய்தது.

2வது நாளாக கோவை மாநகர் பகுதிகளில் பலத்த இடியுடன் கூடிய கன மழை பெய்தது. மாலையில் தொடங்கிய மழையானது இரவு வரை 4 மணி நேரத்திற்கும் மேலாக கன மழை கொட்டி தீர்த்தது.

அதிகளவிலான தண்ணீர் தேங்கியதால் வாகனங்கள் செல்வதிலும் கடும் சிரமம் ஏற்பட்டது. வாகனங்கள் மெல்ல, மெல்ல ஊர்ந்து சென்றதால் அந்த சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பல அடி தூரத்திற்கு காத்து நின்று ஒன்றன்பின் ஒன்றாக சென்றன.

இதேபோன்று பல்வேறு பகுதிகளிலும் தாழ்வான இடங்களில் மழைநீருடன் கழிவு நீரும் சேர்ந்ததால் அப்பகுதி பொதுமக்கள் அவதியடைந்தனர். கோவை அரசு ஆஸ்பத்திரி தாழ்வான பகுதியில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் உள்ளே புகுந்து விடும்.

மழைநீர் புகாமல் இருக்க அந்த பகுதி உயர்த்தி தளம் அமைக்கப்பட்டது. ஆனால் நேற்று பெய்த மழைக்கு அரசு மருத்துவமனை கேண்டீனுக்குள் மழைநீர் புகுந்தது. அங்கிருந்து மழைநீரும், கழிவுநீரும் சேர்ந்து எம்.எம். 4 கட்டிடத்தின் வார்டுகளுக்குள் புகுந்தது.

இதனால் அங்கு கடும் துர்நாற்றம் வீசியது. நோயாளிகள் சிரமத்திற்குள்ளாகினர். உடனடியாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் வார்டுக்குள் புகுந்த தண்ணீரை வெளியேற்றி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

# சுப்ரீம் கோர்ட்டு உணவகத்தில் நவராத்திரியையொட்டி சைவ உணவு வழங்குவதா? கி.வீரமணி கண்டனம்



சென்னை, அக். 9

திராவிடர் கழக தலைமை செயற்குழு கூட்டம் தலைவர் கி.வீரமணி தலைமையில் பெரியார் திடலில் நடந்தது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழின சமுதாயத்தில் மிகப்பெரிய எழுச்சியையும், மாற்றத்தையும், வெற்றியையும் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை நவம்பர் 26 ந்தேதி அன்று ஈரோட்டில் சிறப்புடன் நடத்துவது. தமிழின மீனவர்களின் மீதான துயரம் தொடராமல் இருக்க, உறுதியான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இப்பிரச்சனைக்குச் சட்ட ரீதியான முடிவினை ஏற்படுத்திட, அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை நடத்தி, உரிய முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்கூட்டம் ஒருமனதாக தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறது.

'புதிய கல்விக்கொள்கையின் அங்கமான பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியை விடுவிக்க முடியும்' எனத் தெரிவித்து தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியைக் கொடுக்க மறுத்து வரும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம்.

'விஸ்வகர்மா யோஜனா' என்ற பெயரில் ஒன்றிய அரசு திணிக்கும் குலக்கல்வித் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு நிராகரித்திருப்பது வரவேற்கத்தக்கது. இத்திட்டத்தை கைவிடவேண்டும் என்று ஒன்றிய அரசை இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

ஒன்றியத்தில் ஆளும் மைனாரிட்டி பா.ஜ.க. அரசின் பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில், வரும் அக்டோபர் 7 முதல் 11 வரை பல்வேறு போட்டிகளை நடத்த ஒன்றிய அரசு சுற்றறிக்கை விடுத்து உள்ளது.

அதில், விவாதப் போட்டிக்கு அளிக்கப்பட்டு உள்ள "ஒரு தேசம் ஒரு தேர்தல், விக்ஷித் பாரத்" ஆகிய தலைப்புகள் சர்ச்சைக்குரியவை.

மாணவர்களின் பிஞ்சு உள்ளத்தில் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பரவலாக்க முன்னெடுக்கும் இந்த முயற்சியை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது. மக்கள் செலுத்தும் வரிப் பணத்தை பள்ளிகளின் மேம்பாட்டுக்கு தர மறுக்கும் இதே பாஜக, தன்னுடைய ஆபத்தான கொள்கைத் திட்டங்களை கொண்டு செல்ல பள்ளிகளை பயன்படுத்துவது மாணவர் விரோதப் போக்காகும், வன்மையான கண்டனத்திற்குரியதாகும். இந்த முடிவை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசை திராவிடர் கழக தலைமைச் செயற்குழு வலியுறுத்துகிறது.

'நவராத்திரி விழா' என்கிற பெயரில் ஒன்பது நாட்களுக்கு உச்சநீதிமன்ற உணவகத்தில் சைவ உணவு மட்டுமே வழங்கப்படும் என்றும், அது மட்டுமின்றி பூண்டு, வெங்காயம் இல்லாத உணவு மட்டுமே வழங்கப்படும் என்றும் உச்சநீதிமன்ற உணவகத்தின் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இது தவறான முன்னுதாரணமாகி விடும் என உச்ச நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்குரைஞர்களின் கருத்துக்கு உரிய மதிப்பு அளித்து, உணவு கட்டுப்பாடு விதிக்கும் செயலை தடுத்து நிறுத்துமாறு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு இச்செயற்குழு வேண்டுகோள் விடுக்கிறது என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஏற்காட்டில் பலத்த மழை: அருவிகளில் குளித்து மகிழ்ந்த சுற்றுலாப் பயணிகள்



ஏற்காடு, அக். 9

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகல் நேரங்களில் அனல் பறக்கும் வெப்பமும், மாலை நேரத்தில் மழையும் பெய்து வருகிறது. அதே போல் நேற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது.

சுற்றுலா தலமான ஏற்காட்டில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை கொட்டி வருகிறது. அதே போல் நேற்று மதியமும் திடீரென அடர்த்தியான மேகமூட்டம் நிலவியது.

பின்னர் மதியம் 2 மணியளவில் பெய்ய தொடங்கிய மழை தொடர்ந்து சுமார் 2 மணிநேரம் கனமழையாக கொட்டியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் குட்டைபோல் தேங்கியது.

தொடர்ந்து மழை தூறிக்கொண்டே இருந்தது. பின்னர் இரவு 9 மணியளவில் மீண்டும் கனமழையாக பெய்ய தொடங்கியது. இடிமின்னலுடன் மழை பெய்தது. இதன் காரணமாக கடுங்குளிரும் நிலவியது. தொடர்ந்து விடிய, விடிய மழை தூறிக்கொண்டே இருந்தது.

இன்று காலையும் ஏற்காட்டில் சாரல்மழை பெய்தது. பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்வோர் குடை பிடித்தப்படி சென்றனர். ஏற்காட்டில் கொட்டிய மழையின் காரணமாக மலைப்பாதையில் பல்வேறு இடங்களில் திடீர் அருவிகள் தோன்றி தண்ணீர் கொட்டி வருகிறது. சேலம் மாவட்டத்திலேயே அதிகபட்சமாக ஏற்காட்டில் 44.4 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

# ஆயுத பூஜை விடுமுறை சென்னையில் இருந்து 2 ஆயிரம் சிறப்பு பஸ்கள் இயக்க ஏற்பாடு

சென்னை, அக். 9

ஆயுதபூஜை, விஜயதசமி போன்ற பண்டிகையை வியாபாரிகளும், தொழிலாளர்களும் மட்டுமின்றி பொதுமக்களும் கொண்டாடுவது வழக்கம். வருகிற 11ந்தேதி (வெள்ளிக்கிழமை) ஆயுத பூஜை என்பதால் அரசு விடுமுறையாகும். மறுநாள் சனிக்கிழமை விஜயதசமியும் அதனை தொடர்ந்து 13 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பொதுவான விடுமுறையும் வருவதால் 3 நாட்கள் அரசு விடுமுறை கிடைக்கிறது.

தொடர் விடுமுறை வருவதால் வெளியூர் பயணம் அதிகரிக்கும் என்பதால் அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பாக சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

அரசு விரைவு பஸ்களில் முன்பதிவு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சென்னையில் இருந்து நாளையும் மறுநாள் வியாழக்கிழமையும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

சென்னை கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து 2092 பஸ்கள் வழக்கமாக இயக்கப்படும். நாளை (புதன்கிழமை) அவற்றுடன் கூடுதலாக 500 சிறப்பு பஸ்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்கள் 10 ந் தேதி பயணம் மேற்கொள்வதால் அன்று 2000 சிறப்பு பஸ்கள் கூடுதலாக இயக்கப்பட உள்ளன.

இதுகுறித்து அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர் மோகன் கூறியதாவது:

ஆயுத பூஜை விடுமுறையையொட்டி அனைத்து போக்குவரத்து கழகங்கள் மூலம் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. நாளை பயணத்திற்கு 13 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். 10ந் தேதி பயணம் செய்ய மொத்தம் 31 ஆயிரம் பேர் முன்பதிவு செய்து காத்து இருக்கிறார்கள். இதில் சென்னையில் இருந்து மட்டும் பயணம் செய்ய 18 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

364 அரசு விரைவு பஸ்களுக்கும் 40 பிற போக்குவரத்துக் கழக பஸ்களுக்கும் முன்பதிவு நடக்கிறது. நீண்ட தூரம் செல்லக்கூடியவர்கள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டால் கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# கலைஞர் நூற்றாண்டு பூங்கா நுழைவு கட்டணத்தை குறைக்க வேண்டும் அன்புமணி ராமதாஸ்



சென்னை, அக். 9

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னை கதீட்ரல் சாலையில் தனியாரிடமிருந்து மீட்கப்பட்ட அரசுக்கு சொந்தமான நிலத்தில் வெளிநாடுகளுக்கு இணையான அம்சங்களுடன் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால், அதற்கான கட்டணம் ஏழை மக்களால் செலுத்த முடியாத அளவுக்கு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பது சரியல்ல.

நுழைவுக் கட்டணமாக ரூ.100 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது 3 மணி நேரத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பூங்காவில் உள்ள பிற வசதிகளை பார்வையிட தனித்தனிக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜிப்லைனில் ஏறி சாகச பயணம் மேற்கொள்ள ரூ.250, பறவையகத்தில் பல்வேறு வெளி நாட்டு பறவைகளை பார்வையிட மற்றும் உணவளித்து மகிழ்ந்திட ரூ.150, இசை நீருற்றின் கண்கவர் நடனத்தை காண ரூ.50, கண்ணாடி மாளிகையில் அரிய வகை செடிகளை பார்வையிட ரூ.50, குழந்தைகள் சவாரி விளையாட்டுக்கு ரூ.50 என ஒருவர் பூங்காவின் அனைத்து அம்சங்களையும் அனுபவிக்க ரூ.650 செலுத்த வேண்டும். இது மிக அதிகம்.

செம்மொழிப் பூங்காவுக்கு இணையாக கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவின் நுழைவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். பூங்காவில் உள்ள அனைத்து அம்சங்களையும் அனுபவிக்க மொத்தமாக குறைந்த கட்டணத்தை நிர்ணயிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

அப்போது தான் பூங்கா உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறும். இல்லாவிட்டால் இது பணக்காரர்களுக்கான பூங்காவாகவே பார்க்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. மனிதச் சங்கிலி போராட்டம்



சென்னை, அக்.9

தமிழகத்தில் சொத்து வரி உயர்வு, மின் கட்டணம், பத்திர பதிவு கட்டணம் உயர்வு, குடிநீர், கழிவு நீர் கட்டண உயர்வு, சட்டம்ஒழுங்கு சீர்கேடு ஆகியவற்றை கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று மனித சங்கிலி போராட்டம் நடத்தப்படும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்திருந்தார்.

இதன்படி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னணி நிர்வாகிகள் தலைமையில் இன்று மனித சங்கிலி போராட்டம் நடக்கிறது.

மாநகராட்சிக்குட்பட்ட வட்டங்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் இன்று காலை 10.30 மணி அளவில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் திரண்டு மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தி.மு.க. அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களையும் எழுப்பினார்கள்.

சென்னையில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளிலும் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது. ராயபுரம் எம்.சி. ரோடு சுழல் மெத்தை பகுதியில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் நடந்த மனித சங்கிலி போராட்டத்தில் கட்சி நிர்வாகிகள், மகளிர் அணியினர் என பலரும் பங்கேற்று கைகோர்த்து நின்றனர்.

வில்லிவாக்கம், கொளத்தூர் உள்பட 7 இடங்களில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் பாபு பங்கேற்றார். இங்கும் அப்பகுதியை சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாளர் தி.நகர் சத்யா தலைமையில் கோடம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகே திரளான தொண்டர்கள் மனித சங்கிலி போராட்டத்தில் கலந்து கொண்டனர். அப்பகுதியில் மொத்தம் 14 இடங்களில் போராட்டம் நடைபெற்றது.

அண்ணாநகர் மண்டல அலுவலகம் அருகில் பகுதி செயலாளர் தசரதன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

தண்டையார்பேட்டை மண்டல அலுவலகம் அருகே மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் தலைமையில் திரண்ட அ.தி.மு.க. வினர் நீண்ட தூரம் மனித சங்கிலியில் கைகோர்த்து நின்றனர்.

சென்னை வால்டாக்ஸ் ரோடு மண்டல அலுவலகம் அருகில் நடைபெற்ற மனித சங்கிலியில் மாவட்ட செயலாளர் பாலகங்கா மற்றும் முக்கிய நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாளர்கள் ஆதிராஜாராம், வேளச்சேரி அசோக் ள்ளிட்டோரும் தங்களது பகுதிக்குட்பட்ட இடங்களில் மனித சங்கிலி போராட்டத்தில் பங்கேற்றனர்.

மதுரவாயலில் பகுதி செயலாளர் தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அம்பத்தூரில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் மாவட்ட செயலாளர் அலெக்சாண்டர் பங்கேற்றார். திருமங்கலத்தில் பகுதி செயலாளர் மோகன் தலைமையில் நடந்த மனித சங்கிலியில் வெங்கடேஷ் பாபு கலந்து கொண்டார்.

தென்சென்னை தெற்கு மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் 13 இடங்களில் மனித சங்கிலி போராட்டம் நடந்தது. 128 வது வார்டுக் குட்பட்ட விருகம்பாக்கம் ஆற்காடு சாலையில் நடந்த மனித சங்கிலி போராட்டத்தில் விருகை ரவி தொண்டர்களுடன் கலந்து கொண்டார்.

127வது வார்டுக்கு உட்பட்ட கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலை 129 வது வார்டு அருணாசலம் ரோடு 136வது வார்டு பிடி ராஜன் சாலை, 137வது வார்டு வெங்கட்ராமன் சாலை, 138வது வார்டு அண்ணா மெயின் ரோடு, 139 ஜாபர்கான் பேட்டை ஜோன்ஸ் ரோடு, 140வது வார்டு கோடம்பாக்கம் ரோடு மேட்டுப்பாளையம், 142 அண்ணாசாலை அம்மா பூங்கா அருகில் 168வது வார்டு ஈக்காடு தாங்கல் அம்பாள் நகர், 169 சைதாப்பேட்டை இளங்காளியம்மன் கோவில் அருகில் 170வது வார்டு கோட்டூர்புரம், 172 வது வார்டு ரேஸ்கோர்ஸ் ரோடு ஆகிய இடங்களில் மனித சங்கிலி போராட்டம் நடந்தது.

போராட்டத்தில் பகுதி செயலாளர்கள் ஏ.எம். காமராஜ், சைதை சுகுமார், ஷேட்அலி, சி.கே.முருகன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

சென்னை புறநகர் மாவட் டத்தில் சோழிங்கநல்லூர், ஆலந்தூர் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் சோழிங்கநல்லூர் தொகுதியில் மாவட்ட தலைமை அலுவலகம் அருகேயும் கந்தன்சாவடியில் மாவட்ட செயலாளர் கே.பி.கந்தன் தலைமையிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதேபோல் தொகுதி முழுவதும் 30 இடங்களில் ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் நடந்தது. ஆலந்தூர் கிழக்கு பகுதியில் பகுதி செயலாளர் பரணி பிரசாத் தலைமையில் லேபர் கிணறு தெரு, நங்கநல்லூர் 4வது பிரதானசாலை, ஆதம்பாக்கம் சக்தி நகர், நங்கநல்லூர் கலைஞர் கருணாநிதி நகர், எம்.ஜி.ஆர். சாலை துர்கா பவன் அருகிலும், மீனம் பாக்கம் வ.உ.சி. நகர் ஆகிய இடங்களிலும் நடந்தது.

அ.தி.மு.க.வில் உள்ள 82 மாவட்ட செயலாளர்களும் இன்று தங்களது பகுதியில் மனித சங்கிலி போராட் டத்தை ஒருங்கிணைந்து நடத்தினார்கள். அனைத்து மாநகராட்சி பகுதிகள், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் இன்று அ.தி.மு.க.வினர் நடத்திய போராட்டத்தையொட்டி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# விக்கிரவாண்டியில் 60அடி அகலத்தில் தமிழக வெற்றி கழக மாநாட்டு மேடை அமைக்கும் பணிகள் தீவிரம்



விக்கிரவாண்டி, அக். 9

விக்கிரவாண்டியில் தமிழக வெற்றிக்கழக மாநாட்டிற்கு மிகபிரமாண்டமான மாநாட்டு மேடை அமைக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்த வி.சாலையில் தமிழக வெற்றிக்கழக மாநாடு வருகிற 27 ந்தேதி நடைபெறுகிறது. இதற்காக கடந்த 4ந் தேதி பந்தக்கால் நடும் விழா நடந்தது.

மாநாட்டிற்கான மேடை அமைக்கும் பணிக்கு சென்னை திருவேற்காடு ஜே.பி., பந்தல் அமைப்பாளர் விஸ்வநாதன் ஒப்பந்தம் செய்து பணியை தொடங்கியுள்ளனர். மாநாட்டு திடலில், மாநாட்டு மேடை கிழக்கு நோக்கி, ரெயில்வே தண்டவாளத்திலிருந்து 200 மீட்டர் தள்ளி, இரும்பு பைப்புகளை இறக்கி பணியை தொடங்கி உள்ளனர்.

ரெயில்வே பாதையின் அருகே கட்சியினர் யாரும் செல்லாத வகையில் தடுப்பு வேலி அமைக்கும் பணி தொடங்கியுள்ளது. மேடை 60 அடி அகலத்தில், 170 அடி நீளத்திற்கு அமைகிறது.

மேடையில் கட்சி தலைவர் விஜய் தங்க தனி அறைகளும், வி.ஐ.பி.,கள் தங்க தனி அறைகள் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. தற்பொழுது பந்தல் அமைக்கும் பணியாளர்கள் தங்க தனி ஷெட் அமைத்துள்ளனர்.

அவர்கள் சமைக்க தனியாக ஷெட் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மாநாட்டிற்கு வருகின்ற தொண்டர்கள் நினைக்கும் சமயத்தில் உணவருந்த மாநாட்டு திடல் முழுவதும் ஆங்காங்கே ஸ்டால்கள் அமைக்கப்பட உள்ளது. திடலினுள் இருக்கும் கிணறுகளை சுற்றி பாதுகாப்பாக வேலி அமைத்ததுடன் முழுவதையும் இரும்பு தகரம் கொண்டு மறைக்க உள்ளனர். திறந்த வெளியில் மாநாடு நடத்த முடிவு செய்து பணிகள் விறுவிறுவென நடைபெற்று வருகிறது. இடையிடையே மழை பெய்து வருவதால் பணியில் சற்று தாமதம் ஏற்படுகிறது. ஆனாலும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

# சாதி சான்றிதழ் கேட்டு மாணவர்கள் காத்திருப்பு போராட்டம்: 21 கிராம மக்கள் பங்கேற்பு

சத்தியமங்கலம், அக்.9

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா கடம்பூர் மலைப்பகுதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தை சேர்ந்த 15,000 மலையாளி இன மக்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறார்கள்.

தமிழகத்தில் சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் வசிக்கும் மலையாளி இனமக்களுக்கு எஸ்.டி பட்டியலில் சாதி சான்று பெற்றுள்ளனர்.

ஆனால் ஈரோடு மாவட்டத்தில் கடம்பூர், பர்கூர் மலைகளில் வசிக்கும் மலையாளி மக்களுக்கு அவ்வாறு சான்று வழங்க மறுக்கின்றனர். இதனால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களின் குழந்தைகள் கல்வி, வேலை வாய்ப்பு, அரசு சலுகை பெற முடியாமல் தவித்து வருகின்றனர்.




ஜாதி சான்றிதழ் வழங்க வலியுறுத்தி பல வருடங்களாக பல்வேறு கட்ட போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடம்பூர் மலை குத்தியாலத்தூர் ஊராட்சி கரளியம், கல் கடம்பூர், பெரியசாலட்டி, சின்னசாலட்டி, இருட்டி பாளையம், கிட்டாம்பாளையம், அத்தியூர் உள்பட 21 கிராமங்களில் பந்தல் அமைத்து கோரிக்கைகள் அடங்கிய பதவிகளை பிடித்து பள்ளி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களுடன் 21 கிராமங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்ததும் சத்தியமங்கலம் தாசில்தார் சக்திவேல் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் அதில் உடன்பாடு ஏற்படவில்லை. இதைத்தொடர்ந்து இன்று 2வது நாளாக மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடன் கிராம மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பதிவு செய்யாத தனியார் மகளிர் விடுதிகள் மீது சட்ட நடவடிக்கை: சென்னை மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை

சென்னை, அக்.9

சென்னை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மகளிர் விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஆகியவற்றை வருகிற நவம்பர் 15ம் தேதி மாலை 5 மணிக்குள் பதிவு செய்ய வேண்டும் என்று சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மகளிர் விடுதிகள் மற்றும் பெண் ஊழியர்கள் தங்கும் இல்லங்கள் ஆகியவை தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள் ஒழுங்கு முறைச்சட்டம் 2014 மற்றும் விதிகள் 2015 ன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பதிவுசெய்யப்படாத விடுதிகள் http://tnswp.com என்ற இணையதள பக்கம் மூலமாக பதிவு செய்யவேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்ய அறக்கட்டளை பதிவு பத்திரம், சொந்த கட்டடம் மற்றும் வாடகை ஒப்பந்த பத்திரம், கட்டிட வரைபடம், கட்டிட உறுதிச்சான்று, தீயணைப்புத்துறையின் தடையில்லா சான்று, போலீஸ் சரிபார்ப்பு சான்று, உணவு பாதுகாப்புத்துறையின் சான்றிதழ், தணிக்கை அறிக்கை மற்றும் சுகாதாரதுறைச்சான்று ஆகிய சான்றுகளுடன் http://tnswp.com என்ற இணையதளத்தில் நவம்பர் 15ந்தேதி மாலை 5 மணிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும். இதுகுறித்த சந்தேகங்களுக்கு 91500 56800 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். முறையாக பதிவு செய்யப்படாத தனியர் விடுதி மற்றும் அதன் இணை நிர்வாகிகள் மீது சட்டப்படி போலீசில் வழக்குபதிவு செய்து அதிகபட்சமாக 2 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்க ப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாம் கட்சியில் இருந்து விலகிய மேலும் ஒரு நிர்வாகி சீமான் மீது கூறிய குற்றச்சாட்டுகள்

சென்னை, அக். 9

நாம் தமிழர் கட்சியில் இருந்து சில பொறுப்பாளர்கள் விலகி வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பாளர் பிரபாகரன் தலைமையில் நிர்வாகிகள் கட்சியில் இருந்து விலகினர். மேலும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பில் இருந்து சுகுமார் விலகுவதாக தெரிவித்தார். அவர்கள் சீமான் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை சாட்டினார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு சீமான், இருக்குற வரைக்கும் இருப்பாங்க. திடீர்னு அதிருப்தி வரும்... திருப்தி இருக்குற இடத்துல போய் சேர்ந்துக்கற வேண்டியதுதான். அது ஒரு பெரிய சிக்கல் இல்லை. இது நாட்டுக்கும், மக்களுக்கும் பிரச்சனை ஒன்னும் இல்லை என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியின் விழுப்புரம் மேற்கு மாவட்ட செயலாளர் பூபாலன் அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

நாம் தமிழரில் இருக்கும் நீங்கள் யாரும் கேள்வி கேட்கக்கூடாது. என்னுடைய இஷ்டப்படித்தான் நான் செயல்படுவேன். நீங்கள் இருந்தால் இருங்கள் இல்லாவிட்டால் கிளம்புங்கள் என சீமான் என்னிடம் பேசியது வருத்தத்தை ஏற்படுத்தியதாக பூபாலன் கூறி உள்ளார்.

# ரெயில்களில் கல்லூரி மாணவர்கள் மோதல்: 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை ரெயில்வே போலீஸ் எச்சரிக்கை

சென்னை, அக். 9

சென்னை சென்டிரல் ரெயில் நிலையம் அருகே கடந்த 4ம் தேதி நடந்து சென்றுகொண்டிருந்த மாநில கல்லூரி மாணவரை மற்றொரு கல்லூரி மாணவர்கள் கொடூரமாக தாக்கினர். இதில் படுகாயமடைந்த அவரை சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விவகாரத்தில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கடும் தண்டனை கிடைக்கும் வகையிலான சட்டப்பிரிவுகளில் ரெயில்வே காவல்துறை வழக்குப் பதிந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, இனி வரும் காலங்களில் கல்லூரி மாணவர்கள் மோதலில் ஈடுபடாமல் இருக்கும் வகையில், ரெயில்வே காவல்துறை சார்பில் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் எழும்பூர் ரெயில்வே போலீஸ் துணை சூப்பிரண்டு ரமேஷ் மற்றும் சென்டிரல் ரெயில்வே போலீஸ் துணை சூப்பிரண்டு கர்ணன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 4ந் தேதி சென்டிரல் ரெயில் நிலையத்தில் மாநில கல்லூரியை சேர்ந்த மாணவரை மற்றொரு கல்லூரியை சேர்ந்த 5 பேர் வழிமறித்து கொடூர தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் உயிரிருக்கு ஆபத்தான நிலையில் மாணவர் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் தொடர்பாக பெரியமேடு போலீசார், தாக்குதலில் ஈடுபட்ட 5 மாணவர்களை கைது செய்து கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மோதல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது கல்லூரி நிர்வாகமும் சஸ்பெண்ட் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சென்னை சென்டிரலில் இருந்து, மின்சார ரெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரெயில்களில் கல்லூரி மாணவர்கள் செல்லும்போது பேசின் பிரிட்ஜ் சந்திப்பில் ஒரே நேரத்தில் ரெயில்கள் நிற்கிறது. அந்த நேரத்தில் மாணவர்கள் ஒருவரை ஒருவர் கற்களால் தாக்கிக் கொள்கின்றனர். இதுதொடர்பாக ரெயில்வே நிர்வாகத்தை அணுகி குறிப்பிட்ட ரெயில்களை தாமதமாக இயக்க வேண்டுகோள் விடுத்துள்ளோம். புதிய சட்டத்தின் அடிப்படையில் மோதல்களில் ஈடுபடும் மாணவர்கள் குறித்து சி.சி.டி.வி. கேமரா, செல்போன் வீடியோ உள்ளிட்ட டிஜிட்டல் ஆதாரங்கள் இருந்தாலே வழக்கு பதிவு செய்து கடும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை உள்ளது.

ரெயில் நிலையங்கள் முழுவதும் சி.சி.டி.வி. கேமராக்கள் இருப்பதால் பிரச்சினைகளில் ஈடுபடும் மாணவர்கள் எளிதில் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்று மோதலில் ஈடுபட்டால் புதிய சட்டதிருத்தத்தின் படி, 10 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை கிடைக்கும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடியாக குறைந்தது

பென்னாகரம், அக். 9

கர்நாடகம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்தது. மேலும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்தது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது.

இந்த நிலையில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது.



இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

இதனால் சுற்றுலா பயணிகள் மெயின் அருவியில் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்தனர். மேலும் அவர்கள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்து பார்த்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# சாதனை படைத்த 'சிங்கம் அகெய்ன்' பட டிரெய்லர்




தமிழில் ஹரி இயக்கத்தில் சூர்யா நடிப்பில் வெளியான 'சிங்கம்' படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அதனைதொடர்ந்து அந்தப்படம் இந்தியில் அஜய் தேவ்கன் நடிப்பில் சிங்கம் என்கிற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு அங்கேயும் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இந்த படத்தை பிரபல இயக்குனர் ரோஹித் ஷெட்டி இயக்கி இருந்தார். பின்னர் இதன் இரண்டாம் பாகமாக 'சிங்கம்ரிட்டன்ஸ்'என்கிறபடத்தையும்,அஜய்தேவ்கனை வைத்து இயக்கினார் ரோஹித் ஷெட்டி.

ஆனால் இங்கே தமிழில் வெளியான 'சிங்கம் 2' படத்தின் ரீமேக்காக அல்லாமல் புதிய கதையை வைத்து அந்தப்படத்தை இயக்கி இருந்தார். இந்த நிலையில் ரோஹித் ஷெட்டி தற்போது மீண்டும் 'சிங்கம் அகெய்ன்' என்கிற பெயரில் இதன் மூன்றாம் பாகத்தை இயக்கி வருகிறார்.

இந்த படத்திலும் அஜய் தேவ்கனே கதாநாயகனாக நடிக்கிறார். மேலும் இதில் கரீனா கபூர், தீபிகா படுகோன், அக்சய் குமார், ரன்வீர் சிங், ஜாக்கி ஷெராப், அர்ஜுன் கபூர், ஸ்வேதா திவாரி போன்ற பெரிய நடிகர் பட்டாளமே நடிக்கின்றனர். இப்படம் அடுத்த மாதம் 1ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இப்படத்தின் டிரெய்லர் நேற்று வெளியானது. இந்த டிரெய்லர் ஒரு புதிய சாதனையை படைத்துள்ளது. அதாவது, வெளியான 24 மணி நேரத்தில் அதிக பார்வைகள் கடந்த இந்தி பட டிரெய்லர் என்ற சாதனை படைத்துள்ளது. 24 மணி நேரத்தில் அனைத்து சமூக ஊடகங்களிலும் சேர்த்து 138 மில்லியன் (13 கோடியே 80)பார்வைகளைபெற்றுள்ளது.இதுகுறித்தபதிவைதயாரிப்புநிறுவனமானஜியோஸ்டுடியோஸ்வெளியிட்டுள்ளது.

# எனது 21 வருட திரை பயணத்தில் முக்கியமான படம் பிளாக் நடிகர் ஜீவா






'ஆசைஆசையாய்'படத்தின்மூலம்தமிழ்சினிமாவில் அறிமுகமானவர்நடிகர்ஜீவா. இவர் 'சிவாமனசுலசக்தி, கற்றது தமிழ், கொரில்லா, ரவுத்திரம், கலகலப்பு 2 போன்ற படங்களில் நடித்து தனக்கென ரசிகர்களை உருவாக்கி வைத்துள்ளார். இவர் தற்போது 'மாநகரம், டாணாக்காரன்' போன்ற படங்களை தயாரித்த பொட்டன்சியல் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள புதிய படத்தில் நடித்துள்ளார்.

அறிமுக இயக்குனர் கே.ஜி. பாலசுப்ரமணி இயக்கியுள்ள இந்த படத்தில் நடிகர் ஜீவா கதாநாயகனாகவும், நடிகை பிரியா பவானி சங்கர் கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். இப்படத்திற்கு சாம்.சி.எஸ் இசையமைத்துள்ளார். இந்த படத்திற்கு 'பிளாக்' என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும், விவேக் பிரசன்னா, யோக் ஜபீ, ஷாரா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்துக்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார்.

இரண்டு கதாபாத்திரங்கள் மட்டுமே பிரதானமாகக் கொண்டு, ஒரே நாள் இரவில் நடக்கும் சம்பவமாக இக்கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படம் வரும் அக்டோபர் 11ம் திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்நிலையில் சென்னை சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் லேபில் நடிகர் ஜீவா, இயக்குநர் கே.ஜி பாலசுப்பிரமணி உள்ளிட்ட பிளாக் படக்குழுவினர் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர்.

அப்போது நடிகர் ஜீவா பேசுகையில், "இந்த படத்தின் கதையைக் கேட்ட உடனே பிடித்தது. காரணம் பல நடிகர்களிடம் இந்த கதை சென்று திருத்தப்பட்ட ஒன்றாக வந்தது. அதனாலே எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இது ஆங்கில படத்தின் ரீமேக் ஆனால் அதை நான் பார்க்கவில்லை. இயக்குநர் என்ன கதை கூறினாரோ அதை அப்படியே நடித்துள்ளேன். என்னுடைய 21 வருட திரை பயணத்தில் முக்கியமான படமாக 'பிளாக்' அமைந்துள்ளது. நான் திரைக்கு வந்த முதல் 10 வருடத்தில் பல புதிய முயற்சிகளை எடுத்தேன். அதனைத் தொடர்ந்து தற்பொழுது இந்த படத்தில் அப்படி ஒரு முயற்சியை எடுத்துள்ளேன்.

நிச்சயம் இந்த திரைப்படம் வித்தியாசமான அதேநேரம் சுவாரசியமான படமாக இருக்கும். படம் புரியவே மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும் என தோன்றும். இந்த படத்தில் நான் மட்டும் தான் உங்களுக்கு பொழுதுபோக்கு அதற்கு காரணம் படம் முழுக்க சீரியஸ் ஆக செல்லும். நான் தனியாக இருப்பேன்.

என்னுடைய சிறந்த நடிப்பை வெளிக்கொண்டு வருவதற்கு இந்த படம் உதவியாக இருந்தது. இந்த கூட்டணியுடன் பல படங்கள் பண்ண வேண்டும் என ஆசைப்படுகிறேன். படத்தின் டப்பிங் பணியின் போது நண்பர்கள் சில காட்சிகளைப் பார்த்து படத்தில் எதோ ஒன்று உள்ளது எனக் கூறினர். என்னுடைய திரை பயணத்தில் இந்த பிளாக் திரைப்படம் முக்கிய படமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

# ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்: போபண்ணா இணை அதிர்ச்சி தோல்வி



ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் சீனாவில் நடந்து வருகிறது. இந்த தொடரில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோகன் போபண்ணா குரோசியாவின் இவான் டோடிக் இணை, குரோசியாவின் நிகோலோ மெடிக்நெதர்லாந்தின் வெஸ்லி ஜோடியுடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் முதல் செட்டில் போபண்ணா ஜோடி 67 (57) என போராடி தோற்றது. இதையடுத்து 2வது செட்டில் அபாரமாக செயல்பட்ட போபண்ணா ஜோடி 62 என எளிதில் கைப்பற்றியது. இதையடுத்து வெற்றியாளரைதீர்மானிக்கும் 3வது செட்டில் அனல் பறந்தது. இரு ஜோடியும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தனர். இறுதியில் இந்த செட்டில் போபண்ணா ஜோடி 1214 என்ற புள்ளிக்கணக்கில் தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறியது.

# மகளிர் டி20 உலகக்கோப்பை: அமெலியா கெர் அபார பந்துவீச்சு... ஆஸ்திரேலியா 148 ரன்கள் சேர்ப்பு



9வது மகளிர் டி20 உலகக் கோப்பை தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் கலந்து கொண்டுள்ள 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஏ பிரிவில் இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகளும், 'பி' பிரிவில் இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், வங்காளதேசம், ஸ்காட்லாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், இன்றிரவு நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா நியூசிலாந்து அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. இதையடுத்து ஆஸ்திரேலியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக அலிசா ஹீலி மற்றும் பெத் மூனி ஆகியோர் களம் இறங்கினர்.

இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரன்கள் சேர்த்தனர். இதில் அலிசா ஹீலி 26 ரன்னிலும், பெத் மூனி 40 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து களம் இறங்கிய எல்லிஸ் பெர்ரி 30 ரன்னிலும், போப் லிட்ச்பீல்ட் 18 ரன்னிலும், கிரேஸ் ஹாரிஸ் ரன் எடுக்காமலும், ஜார்ஜியா வேர்ஹாம் 4 ரன்னிலும், ஆஷ்லே கார்ட்னர் 4 ரன்னிலும் அவுட் ஆகினர்.

இதையடுத்து அன்னாபெல் சதர்லேண்ட் தஹ்லியா மெக்ராத் ஜோடி சேர்ந்தனர். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 148 ரன்கள் எடுத்தது. ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக பெத் மூனி 40 ரன் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக அமெலியா கெர் 4 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 149 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து ஆட உள்ளது.

# களத்தில் இறங்கி பீல்டிங் செய்த பயிற்சியாளர் டுமினி வைரலாகும் வீடியோ

தென் ஆப்பிரிக்கா அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் அபுதாபியில் நடைபெற்றது. ஏற்கனவே முடிவடைந்த முதல் இரண்டு போட்டிகளிலும் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது தொடரை கைப்பற்றியது. இந்த நிலையில் 3வது மற்றும் கடைசி போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து 284 ரன்கள் குவித்தது. தென் ஆப்பிரிக்கா அணி சார்பில் லிசாட் வில்லியம்ஸ் அதிகபட்சமாக 4 விக்கெட் வீழ்த்தினார். பின்னர் 285 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா அணி களம் இறங்கியது. அயர்லாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தென்ஆப்பிரிக்கா 46.1 ஓவரில் 215 ரன்னில் ஆல்அவுட் ஆனது. இதனால் அயர்லாந்து 69 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்நிலையில் இப்போட்டியின் போது தென் ஆப்பிரிக்க அணியின் பேட்டிங் பயிற்சியாளர் ஜே.பி. டுமினி களத்தில் இறங்கி பீல்டிங் செய்த சம்பவம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஏனெனில் நேற்று போட்டி நடைபெற்ற சூழலில் வெயிலின் தாக்கம் அதிகமாகஇருந்ததால், பெரும்பாலானவீரர்கள்சோர்வடைந்து பெவிலியன் திரும்பினர். இதன் காரணமாக பயிற்சியாளரான டுமினி களத்தில் இறங்கி பீல்டிங் செய்ததுடன், பவுண்டரியையும் தடுத்து அசத்தினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.